# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

### (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

### <u>சாதாரணக் கூட்டப்பொருள்</u>

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

<table>
<tr><th>மாமன்ற கூட்ட தேதி</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள்</th><th>மாமன்ற தீர்மானம்</th></tr>
<tr><td>26.02.2010</td><td>1</td><td>இம்மாநகராட்சிக்கு இயக்குதல் மற்றும் மேம்பாட்டு ஈடு செய்யும் நிதி (Operation and Maintenance Gap Filling Fund) லிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்காக ரூ.70 லட்சம் மதிப்பீட்டில் ரூ. 55 லட்சம் மானியமாக வழங்க அனுமதித்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 39618/ 2009 எல்ஏ3 நாள் 29-01-2010ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்)</th><th>அனுமதிக்கப்பட்ட மான்யம் (ரூ.லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>குடிநீர் விநியோகத்தில் உள்ள முந்தைய CI மற்றும் AC பைப்புகளை மாற்றி 9 கி.மீ தூரத்திற்கு PVC பைப்பாக மாற்றி அமைக்க</td><td>40.00</td><td>25.00</td></tr>
<tr><td>2</td><td>மின் விளக்கு பராமரிப்பிற்கு தேவையான கைடிராலிக் ஏணி ஒன்று வாங்க</td><td>12.00</td><td>12.00</td></tr>
<tr><td>3</td><td>பாதாள சாக்கடை திட்ட பணிக்கு ஜெட்ராடிங் மெஷின் ஒன்று வாங்க</td><td>18.00</td><td>18.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>70.00</td><td>55.00</td></tr>
</table>
2<br>
மேற்கண்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் குடிநீர் விநியோகத்தில் 9 கிமீ. நீளத்திற்கு பிவிசி பைப்புகளை கொண்டு பழைய பைப்புகளை மாற்றி அமைக்கவும் அதற்கான மதிப்பீடு ரூ 40 லட்சத்திற்கும் மின்விளக்கு பராமரிப்பிற்கு தேவையான கைழராலிங்க ஏணி ஒன்று ரூ. 12 லட்சத்தில் வாங்குவதற்கும் பாதாள சாக்கடை அடைப்புகளை சரி செய்ய ஜெட் ராடிங் மெஷின் ஒன்று வாங்க ரூ. 18 லட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. கூடுதல் மதிப்பீட்டு செலவினமான ரூ 15 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u> - 1. ரூ. 70.00 லட்சம் மதிப்பீட்டில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்யஅனுமதிக்கலாம்<br>
2.கூடுதல் செலவினம் ரூ 15 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.</td><td>44) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>2</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட மேலப்பெரிய காட்டன் ரோட்டில் அமைந்துள்ள வணிகவளாக கட்டிடம் பராமரிப்பு செய்யும் பொருட்டு மேற்படி கட்டிடத்திலிருந்து எடுக்கப்பட்ட பழுதான நிலையில் உள்ள பொருட்களை இளநிலை பொறியாளரின் 5-1-2010ம் தேதிய அறிக்கை படி பொது ஏலத்தில் விட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
1) துருப்பிடித்த இரும்பு கூரை தாங்கி (100 X 200 X 18.00 மீ நீளம்) — 3 எண்ணம்<br>
2) கதவு நிலைகள் (0.90 X 2.00 M) — 3 எண்ணம்<br>
3) கதவுகள் (0.80 X 1.90 M) — 3 எண்ணம்<br>
4) மர ரீப்பர் (0.075 X 0.10 X 2.3 மீ) — 42 எண்ணம்<br>
(0.075 X 0.10 X 3.70 மீ) — 45 எண்ணம்<br>
<u>குறிப்பு</u> 1) வரிசை எண் 1 முதல் 4 வரை கண்டுள்ள பொருட்களை பொது ஏலத்தில் விட மாமன்றம் அனுமதிக்கலாம்.</td><td>45) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 3 | தூத்துக்குடி மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 475.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதத்தில் 38786/08/P2 dt 28-7-2009 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையாளர் கடிதம் எண் 38786/08 வ.அ.1 நாள் 4-8-08ல் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் கட்டிடப்பணி நடைபெற்று முடிவடையும் தருவாயில் மாநகராட்சிகளில் முதன்மை பொறியாளர் சென்னை அவர்கள் ஆய்வின் போது இரண்டாம் தளம் வேலை நடைபெற்று விட்டதால் மேற்கண்ட கட்டிடத்திற்கு மின்தூக்கி (Lift) வசதி செய்யப்பட வேண்டும் என முதன்மை பொறியாளர் அவர்கள் அறிவுரை வழங்கியதின் பேரில் மதிப்பீடு<br>3<br>தயாரிக்கப்பட்டு ரூபாய் 3620000/-க்கு அனுமதி பெறப்பட்டது. அதன் பேரில் 22-1-2010 அன்று E.Tender மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி இரண்டு.<br><br>**அலுவலகக்குறிப்பு.**<br>1) திரு எஸ் ரம்போலா ஒப்பந்தக்காரர் - மதிப்பீட்டை விட 0.53% அதிகம்<br>2) திரு.எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் - மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br>பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01 % குறைவாக கொடுத்துள்ள திரு எஸ். சுதர்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் 3600800/-க்கு மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு தயார் செய்ய மதிப்பீடு தொகை 36.20 லட்சம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண் 147/ 09-10 | 46) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4 | தூத்துக்குடி மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 475.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதத்தில் 38786/08/P2 dt 28-7-2009 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதன் அடிப்படையில் தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையாளர் கடிதம் எண் 38786/08 வ.அ.1 நாள் 4-8-08ல் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் கட்டிடப்பணி நடைபெற்று முடிவடையும் தருவாயில் மாநகராட்சிகளில் முதன்மை பொறியாளர் சென்னை அவர்கள் ஆய்வின் போது மேற்கண்ட கட்டிடத்திற்கு குளிர்சாதன வசதிகள் செய்ய வேண்டும் என்று அறிவுரை வழங்கியதின் பேரில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபாய் 2485000/-க்கு அனுமதி பெறப்பட்டது. அதன் பேரில் 22-1-2010 அன்று E.Tender மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டது.<br>1)திரு எஸ் ரம்போலா ஒப்பந்தக்காரர் - மதிப்பீட்டை விட 1.56% அதிகம்<br>2)திரு.எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் - மதிப்பீட்டை விட 0.31 % குறைவு<br><br>**அலுவலகக் குறிப்பு.**<br>பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.31 % குறைவாக கொடுத்துள்ள திரு எஸ். சுதர்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் 2466300/-க்கு மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம். மேலும் மேற்கண்ட பணிக்கு தயார் செய்ய மதிப்பீடு தொகை 24.85லட்சம் அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண் 148/ 09-10 | 47) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5 | இம்மாநகராட்சியின் 2007-2008ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். சி1 /1819 /2007 | 48) அலுவலகக் குறிப்புப்படி ஒப்புதல் அளிக்கப் பட்டது |
| | 6 | தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தூத்துக்குடி இரயில்வே நிலையங்களுக்கு இடையே இரயில்வே கி.மீ. 652/11 -12 மற்றும் 663/6-7ல் கடவு எண் 486/11-12 மற்றும் 663/6-7ல் கடவு எண் 486 & 487ல் இரண்டு இரயில்வே மேம்பாலம் கட்டும் வேலைக்கு அரசு ஆணை எண் 272 நெடுஞ்சாலைக்கு (எச்.க்யூ 2) துறை நாள் 13-11-2007ல் ரூ 2750 இலட்சத்திறகு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி 13-8-2009 அன்று சென்னை நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் அவர்கள் மேற்படி பாலம் கட்ட உள்ள இடங்களை ஆய்வு செய்து தொழில்நுட்ப ஆய்வுக்காக சென்னை நெடுஞ்சாலை திட்டங்கள் தலைமைப்பொறியாளர் மற்றும் நெடுஞ்சாலைத்துறை ஆய்வு மற்றும் வடிவமைப்பு இணை தலைமைப் பொறியாளர் ஆகிய இருவரையும் இடத்தினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி தலைமைப் பொறியாளர்கள் 20-8-2009 அன்று இடத்தினை ஆய்வு செய்து கடவு எண் 486ல் இரயில்வே மேம்பாலமும் (2வது ரயில்வே கேட்டில்)கடவு எண் 487ல் அளவான பயன்பாடு கீழ்ப்பாலம் (Limited use sub-way) (1வது ரயில்வே கேட்டில்) கட்டலாம் எனக் கருத்து தெரிவித்துள்ளார்கள். கடவு எண் 486ல் அதாவது 2ம் கேட்டில் இரயில்வே மேம்பாலம் கட்டினால் 43525 சதுர அடி நிலம் | 49) முதலாம் இரயில்வே கேட்டில் உபயோக கீழ்பாலம் அமைத்தால் நிலத்தடி நீர் உட்புகுந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும். மேலும் மழைக்காலங்களில் மழைநீர் பெருமளவில் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுவதோடு மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படாத வகையில் அமைந்து விடுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாலும், இரண்டாம் |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>கையகப்படுத்தவேண்டியுள்ளது. மேற்கண்ட நிலம் கையகப்படுத்துவதில் கடைகள் மற்றும் வீடுகள் இருப்பதால் அவற்றை அப்புறப்படுத்தி ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கும் ( கடவு எண் 486ல் இரண்டாம் கேட்டில்) அளவான உபயோக கீழ்ப்பாலம் கடவு எண் 487ல் (முதல் கேட்டில்) கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க ஏதுவாக மாநகராட்சி மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் கருத்துருவுகளையும் கேட்டறிந்து தீர்மானத்துடன் அனுப்பி வைக்குமாறு நெடுஞ்சாலைத் துறை திட்டங்கள் கோட்டப்பொறியாளர் திருநெல்வேலி அவர்கள் கடித எண் எ்ல.சி.எ்ண.486 & 487. 2009 வ.தொ.அ. / 19-9-2009ம் தேதிய கடிதததில் தெரிவித்துள்ளார்கள்.<br>
நில ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள 2172 ச.மீ இடம் மற்றும் கட்டிடத்திற்கும் நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடு தொகை நெடுஞ்சாலைத்துறையினரால் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
மேலும் இரண்டாம் கேட் பகுதியில் பாலம் அமைக்கப்படவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கீழரதவீதி தொடர்ச்சி மற்றும் 1ஆம் கேட் வடக்கு காட்டன் சாலையில் ஆகியவற்றில் மேல் மற்றும் கீழ்பாலம் அமைப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லையென இளநிலைப்பொறியாளர் மற்றும் மாமன்ற பொறியாளர் ஆகியோர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.<br>
எனவே கடவு எண் 486ல் இரண்டாம் ரயில்வே கேட்டில் ரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கும் மற்றும் கடவு எண் 487ல் (முதலாம் ரயில்வே கேட்டில்) உபயோக கீழ்ப்பாலம் (Limited use sub-way) கட்டுவதற்கும் மாமன்ற அனுமதி பெற்று நெடுஞ்சாலைத்துறைக்கு கருத்துரு அனுப்பலாம்.<br><br>
அலுவலக் குறிப்பு மாமன்ற மேயர் மற்றும் உறுப்பினர்கள் கருத்துருக்களையும் கேட்டறிந்து தீர்மானத்துடன் நெடுஞ்சாலைத்துறைக்கு அனுப்பி வைக்கலாம். எப்1 / 16163/09</td>
<td>இரயில்வே கேட்டில் மேம்பாலம் அமைத்தால் குறுகிய பகுதியாக காணப்படுவதால் போக்குவரத்திற்கு இடையூறு மற்றும் நெக்கடி ஏற்படும். மேலும் மேம்பாலத்திற்கு கீழ்பகுதியில் இருபுறமும் சாலைகள் பொருட்டு சாலை ஓரங்களில் அமைந்துள்ள வியாபாரஸ்தலங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் பாதிப்புக்குள்ளாவதாலும் பொதுமக்கள் நலன்கருதி முதல் இரயில்வே கேட்டில் உபயோக கீழ்ப்பாலம் மற்றும் இரண்டாம் இரயில்வே கேட்டில் இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டாமென நெடுஞ்சாலைத்துறையின ருக்குத் தெரிவிக்கத் தீர்மானிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>7</td>
<td>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திரு இருதய ஆஸ்பத்திரி ரவுண்டானா முதல் செயின் தாமஸ்பள்ளி வரையிலான பிரதானசாலையின் நடுவில் தெருவிளக்கு மின் கம்பங்கள் அமைந்துள்ளதால் போக்குவரத்திற்கு இடையூராகவும் விபத்துக்கள் அடிக்கடி ஏற்பட காரணமாகவும் அமைந்துள்ளதை சாலை ஓரத்தில் இடம் மாற்றி அமைக்க மின்வாரியம் மூலம் செய்து கொள்ளவும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>
அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் இ3 / 2536/2010</td>
<td>50) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>8</td>
<td>இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2009-2010ம் ஆண்டிற்கு தேவையான கிருமிநாசினிகள் 1) சுண்ணாம்புத்தூள் 2) பிளிச்சிங்பவுடர் 3) கருப்பு பினாயில் கிரேடு 1 ஆகிய பொருட்கள் வாங்க 6-1-2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>
<table>
<tr><td>வ.எண்</td><td>பொருட்களின் விவரம்</td><td>திரு.கார்த்திகேயன் என்பவர் கொடுத்துள்ள விலை விபரம்</td><td>தனி அலுவலர் மதுரை மாவட்ட கூட்டுறவு வேளான் பணிகள் ஸ்தாபனம் கொடுத்துள்ள விலை விபரம்</td></tr>
<tr><td>1</td><td>சுண்ணாம்புத்தூள்</td><td>ரூ. 4000 / டன்</td><td>ரூ 4500 / டன்</td></tr>
<tr><td>2</td><td>பிளிச்சிங் பவுடர்</td><td>ரூ 30000 / டன்</td><td>ரூ 35000 / டன்</td></tr>
<tr><td>3</td><td>கருப்பு பினாயில் கிரேடு 1</td><td>ரூ 28 லிட்டர்</td><td>ரூ 35 லிட்டர்</td></tr>
</table>
மேற்கண்டபடி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தனி அலுவலர் மதுரை மாவட்ட கூட்டுறவு வேளாண் பணிகள் ஸ்தாபனம் கொடுத்துள்ள விலை விகிதத்தைவிட திரு எம். கார்த்திகேயன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மிகக் குறைவாக உள்ளது. எனவே திரு எம். கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு திரு. எம். கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். எச்1/5121/09</td>
<td>51) அலுவலகக் குறிப்புப்படி திரு எம்.கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>9</td>
<td>இம்மாநகராட்சியின் 2008-2009ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். சி1/1819/ 2007</td>
<td>52) அலுவலகக் குறிப்புபடி ஒப்புதல் அளிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>10</td>
<td>இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2009-2010ம் ஆண்டிற்கு தேவையான தளவாடச் சாமான்கள் வாங்க 6-1-2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>
<table>
<tr><td></td><td></td><td colspan="2">பொருள் ஒன்றின் விலை</td></tr>
<tr><td>வ.எ</td><td>பொருட்களின் விவரம்</td><td>திரு.கார்த்தி</td><td>தனி அலுவலர்</td></tr>
</table></td>
<td>53) அலுவலகக் குறிப்புப்படி திரு எம்.கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி</td>
</tr>
</table>

| ண் | | கேயன் என்பவர் கொடுத்துள்ள விலை விபரம் ரூபாய் | மதுரை மாவட்ட கூட்டுறவு வேளான் பணிகள் ஸ்தாபனம் லிட் கொடுத்துள்ள விலை விபரம் ரூபாய் |
|---|---|---|---|
| 1 | பெரிய தூப்புமார் 6' நீளம் உள்ள பிரம்பு கம்பு பிடியுடன் கூடியது | 160 | 170 |
| 2 | மூங்கில் பிரம்பு 15' நீளம் 2" கணம் உள்ளது. | 240 | 270 |
| 3 | இரும்பு 4 முள் உள்ள மரக்கனையுடன் கூடியது (டாடா கம்பெனி) பிக்காஸ் | 270 | 290 |
| 4 | கடப்பாறை 5 1/2 'நீளம் கனம் 1 1/2 ' உள்ளது. | 510 | 540 |
| 5 | அரிவாள் 2 ' நீளம் உள்ள உருக்குப் பட்டையில் உள்ளது. | 230 | 260 |
| 6 | சவுள் ¾' ¾ ' அளவுள்ள இரும்பு தகட்டின் 10' நீளம் உள்ள இரும்பு குழாயில் பொறுத்தியது. | 270 | 275 |
| 7 | மண்வெட்டி டாடா கம்பெனி மரக்கனையுடன் கூடியது. | 230 | 260 |
| 8 | கைவாரி 1/2 ' X 1/2' நீளம் X அகலம் உள்ள 20 கேஜ் உள்ள நாகத்தகட்டில் உள்ளது. | 70 | 90 |
| 9 | இரும்பு சட்டி 16 " விட்டம் உள்ள 1 1/4 கிலோ எடை உள்ளது. | 290 | 310 |
| 10 | கைபெருக்குமார் | 15 | 21 |
| 11 | நாகத் தகடுவாளி 12" உயரம் உள்ளது உறுதியான கணம் உள்ளது. | 230 | 270 |
| 12 | ரோடு சுத்தம் செய்யும் பிரஷ் 4' நீளம் உள்ள மூங்கில் கம்பு பொறுத்தியது | 245 | 280 |
| 13 | மூங்கில் பிரம்பு கூடை | 190 | 210 |
| 14 | வாறுகால் கரண்டி 20 கேஜ் கணம் உள்ள நாகத் தகட்டில் 4' மூங்கில் கம்பு பொருத்தியது. | 260 | 300 |
| 15 | சுண்ணாம்புத்தூள் போடும் தக்காளி கூடை | 85 | 105 |

மேற்கண்டபடி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தனி அலுவலர் மதுரை மாவட்ட கூட்டுறவு வேளாண் பணிகள் ஸ்தாபனம் லிட் கொடுத்துள்ள ஒப்பந்தப் புள்ளியை விட திரு எம். கார்த்திகேயன் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மிகக் குறைவாக உள்ளது. எனவே திரு எம். கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளும் பொருட்டு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** திரு. எம். கார்த்திகேயன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

எச்1/5236/09

ஏற்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | 11 | தூத்துக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து 05-08-2008ம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது தலைமையில் நடைபெற்ற தூத்துக்குடி மாநகராட்சி துவக்க விழா நடைபெற்ற இடத்தில் மேடை, பந்தல், மின்வசதி, விளம்பரம் மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்ய உத்தேச செலவினம் ரூ 81.00 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி பெற்று அதனை முழு மான்யமாக பெற பிரேரனை அரசுக்கு அனுப்பி வைக்கவும் மேற்கண்ட பணியினை ஒப்படைப்பு பணியாக பொதுப்பணித்துறை செய்யவும் நூற்றிவித கட்டணத்திலிருந்து விலக்களித்தும் இம்மாமன்ற தீர்மானம் எண் 401 நாள் 14-07-2008ல் நிறைவேற்றப்பட்டு பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டது.<br>அரசாணை (பத்தாண்டு) எண் 326 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை நாள் 30-07-2008ல் உத்தேச செலவினத்தில் ரூ 50.00 லட்சம் மட்டும் மான்யமாக வழங்கப்படும் என்றும் மீதமுள்ள செலவினத்தொகையினை நகராட்சியே ஏற்கவேண்டும் என்றும் பணியினை பொதுப் பணித் துறைக்கு ஒப்படைப்பு பணியாக செய்யவும் அனுமதித்து ஆணையிடப்பட்டது.<br><br>பொதுப் பணித்துறை செயற்பொறியாளரின் கடிதம் எண் TS/ JD01/F. VIP Visit நாள் 12-07-2008 ல் ரூ 73.80 லட்சத்திற்கு மதிப்பீடு செய்து (நூற்றுவித கட்டணம் ரூ 8.23 லட்சம் உட்பட) அனுப்பியது. அதன் அடிப்படையில் 3 தவணைகளாக ரூ 30 லட்சம் | 54) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது, அலுவலகக்குறிப்பு 2 அனுமதிக்கப்பட்டது அலுவலகக்குறிப்பு 3ன்படி பிரேரணை அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td>வழங்கப்பட்டது. இந்நிலையில் செயற்பொறியாளரின் கடிதம் எண் 371 எம் தொபி/ இவஅ1/வி ஐ பி /08 நாள் 28-10-2008ல் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) அவர்களின் கடிதத்தின்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர்கள் ஸ்பிக் விருந்தினர் மாளிகையில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டதின் அடிப்படையில் திருத்திய மதிப்பீடாக நூற்றிவித கட்டணம் இல்லாமல் ரூ 80.90 லட்சத்திற்கு மதிப்பீடு அனுப்பி தொகை வழங்க தெரிவித்துள்ளார்கள். இதுநாள் வரை ரூ 60.00 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ 20.90 லட்சத்தினை அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. கூடுதலாக பொது பணித்துறைக்கு வழங்க உள்ள தொகையினை மான்யமாக வழங்கவும் மொத்த செலவினம் ரூ 10361279/- க்கு அரசின் அனுமதி பெற பிரேரனை அனுப்பவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
குறிப்பு 1. ரூ50.00 லட்சம் மான்யம் போக மீதத் தொகை நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே ரூ 20.90 லட்சத்தினை (ரூபாய் இருபது லட்சத்தி தொன்னூராயிரம் மட்டும்) அனுமதிக்கலாம்.<br>
2. ரூ10361279/- செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். அரசின் அனுமதி பெறலாம்<br><br>
3. மான்யம் வழங்க கேட்டு பிரேரனை அனுப்பலாம்.<br>
இ1 /18217/ 2008</td><td></td></tr>
<tr><td></td><td>12</td><td>தூத்துக்குடி மாநகராட்சி புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண் 62க்கு 25-11-2009ம் தேதி நடைபெற்ற ஏல/ ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி</th><th>வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு. வி. சுப்பிரமணியன்<br>4/200 முத்தம்மாள் காலனி. தூத்துக்குடி</td><td>ரூ. 900/- (மாதவாடகை)</td></tr>
<tr><td>2</td><td>திரு. எஸ். ஸ்டீபன்<br>20. பாண்டுரெங்கன் தெரு தூத்துக்குடி</td><td>ரூ. 1200/- (மாதவாடகை)</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு – புதிய பேருந்து நிலைய வணிக வளாக கடை எண் 62க்கு திரு எஸ். ஸ்டீபன் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ 1200/- கொடுத்துள்ளார். மேற்படி கடை சுமார் மூன்று ஆண்டுகளாக உரிமம் கோர எவரும் முன்வரவில்லை. எனவே இனிவரும் காலங்களில் மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு புதிய பேருந்து நிலைய வணிகவளாக கடை எண். 62க்கு திரு எஸ். ஸடீபன் என்பவர் கொடுத்த உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாதவாடகை ரூ. 1200/- க்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
அ16 /19826/2009</td><td>55) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>13</td><td>இம்மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பில் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பகுதிகளுக்கு 15-12-2009 வரை சுதா இஞ்சினியரிங் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் செய்யவும் புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மாமன்றத்தால் தீர்மான எண் 150 நாள் 31-08-2009ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. திருச்செந்தூர் சட்டமன்ற இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடைமுறைகள் அமுலுக்கு வந்ததால் உடன் மன்ற ஒப்புதல் பெற இயலவில்லை. தெருவிளக்கு பராமரிப்பின் அவசியம் கருதி 04-01-2010வரை பராமரித்து வரும் நிறுவனத்தின் மூலம் நீடிப்பு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.<br><br>
அலுவலகக் குறிப்பு<br>
மன்றம் தனது தீர்மான எண் 150 நாள் 31-8-09 அனுமதிக்கப்பட்ட தொகை ரூ 28.00 லட்சத்தில் மேற்கண்ட நீட்டிப்பு செய்யப்பட்ட நாட்களுக்கு செலவினம் ஈடு செய்யலாம். ந.க.எண் 13706/இ3/2009</td><td>56) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>14</td><td>இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 28-02-2009ல் ஓய்வு பெற்ற திருமதி. மாரி / மனுவேல் என்பவரின் மாத ஊதியத்தில் ரூ. 20/- வீதம் 148 மாதங்கள் பிடித்தம் செய்த சிறப்பு சேம நலநிதி சந்தா தொகை ரூ 2960/- வட்டி ரூ 2061/- மற்றும் பங்குத் தொகை ரூ 10000/-ஆக மொத்தம் ரூ15021/- ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் எச்2/ 4704/09</td><td>57) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>15</td><td>நகர் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (City Corporate Cum Business Plan) கீழ் 16-06-2009ம் தேதியன்று சென்னையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவன சேவை லிட் நிர்வாக இயக்குநர் அவர்களின் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் இம்மாநகராட்சி பகுதியில் தற்போது நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெறும் பகுதி நீங்கலாக நகரின் மற்ற பகுதிகளிலும் இம்மாநகராட்சியுடன் இணைய உள்ள 10 கிராம பஞ்சாயத்துகளிலும் பாதாள சாக்கடை திட்டத்தினை நடைமுறை படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தொழில்நுட்ப வல்லுநரை நியமனம் செய்ய தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி</td><td>58) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவன சேவை லிட் நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்ள முடிவு செய்யப்பட்டது.<br><br>அதன் அடிப்படையில் இம்மாநகராட்சியின் தற்போது நடைபெறும் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெறும் பகுதிகள் நீங்கலாக மற்ற பகுதிகளிலும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட உள்ள 10 கிராம பஞ்சாயத்து பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டத்தினை நடைமுறைபடுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய தொழில் நுட்ப வல்லுநர் ஒருவரை நியமனம் செய்ய தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவன சேவை லிட். நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்கலாம். மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம் ந.க.எண். இ1/25544/2007 | |
| | 16 | இந்நகராட்சியானது கடந்த 5-8-2008 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வழங்கப்படும் பிறப்பு இறப்பு சான்றுகள் அ4 அளவில் பிறப்பு சான்று பச்சை வண்ணக் காகிதத்திலும் இறப்புச் சான்று இளஞ் சிவப்பு வண்ணக் காகிதத்திலும் கணிணி மூலம் நகல் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப்பட்டு வரும் பிறப்பு இறப்பு சான்றுகள் சாதாரண நடைமுறை நிலையில் உள்ளதாலும் பிறப்பு இறப்பு சான்றுகள் மிக முக்கியமான ஆவணங்களாக கருதப்படுவதாலும் பாதுகாப்புத் தன்மையினை கருத்தில் கொண்டும் வரன்முறைப்படுத்த வேண்டிய அவசியத்தினை கருத்தில் கொண்டும் கணிணியில் நகல் எடுக்கும் செலவினங்கள் மிக கணிசமாக குறையும் என்பதாலும் டோனார் நீண்ட நாட்களுக்கு உபயோகிக்க முடியும் என்பதாலும் இனி வரும் காலங்களில் இம்மாநகராட்சியின் சின்னம் Symbol பதிக்கப்பட்ட கணிணி படிவம் (Computerised Computer form with LOGO) அவசியம் கருதி கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து பெற ஏற்படும் உத்தேச செலவுத் தொகை ரூ 3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக் குறிப்பு** - அனுமதிக்கலாம் எச் 1 /18789/ 09 | 59) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 17 | இம்மாநகராட்சி 4வது வார்டு அழகேசபுரம் மையம் எண் 4ல் புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டும் பணி மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2009-2010ன் கீழ் செய்வதற்கு 30-12-2009 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணை கடிதம் எண் அ2/2357/2009 நாள் 23-11-2009 அன்று ரூபாய் 350000/-க்கு அனுமதி வழங்கியுள்ளது.<br><br>1)திரு.எஸ்.சுதர்சன் மதிப்பீட்டிற்கு ரூ.4.93% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார் ஒப்பந்தத்தொகை ரூ.355417.28<br><br>2)திரு.எஸ்.ரம்போலா மதிப்பீட்டிற்கு ரூ.6.14% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார் ஒப்பந்தத்தொகை ரூ.359504.37<br><br>**அலுவலக் குறிப்பு –** மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தகாரர் இருவரும் மதிப்பீட்டை விட அதிகம் மற்றும் அனுமதித்த தொகைக்கு மேல் ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுக்கப்பட்டதால் ஒப்பந்ததாரர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது.கேட்கப்பட்ட விலைகுறைப்பில் ஒப்பந்தக்காரர் திரு எஸ். சுதர்சன் அவர்கள் விலைகுறைப்பு கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1)திருஎஸ்.சுதர்சன் ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட 3.33% அதிகம் தொகை ரூ 349979/<br>2)திரு எஸ்.ரம்போலா ஒப்பந்தக்காரர் — மதிப்பீட்டை விட 6.14 % அதிகம் தொகை ரூ 359504.37<br><br>இந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு எஸ். சுதர்சன் அவர்கள் மதிப்பீட்டை விட 3.33% அதிகம் கொடுத்துள்ளார். ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 349979.00 மேலும் இவ்வாண்டு 2009-2010ம் பொதுப்பணித்துறை தரவிலைப்பட்டியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. தற்போது கட்டுமான பொருள் விலை உயர்ந்துள்ளது. எனவே பணியில் அவசர அவசியம் கருதி பொறியர் கையேடு பக்கம் எண் 9 பத்தி எண் 2.7.2ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதம் 5% க்கு குறைவாக உள்ளதால் மதிப்பீட்டை விட 3.33% அதிகமாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை 349979.00ஐ மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ம.ப.எண். 134 / 2009-2010 | 60) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |
| | 18 | அரசாணை (நிலை) எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந2) துறை நாள் 25-5-2009ன் படி மாநகராட்சிகளிலுள்ள சந்தைகள், பேருந்து நிலையங்கள், வாகனம் நிறுத்துமிடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து | 61) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 பதிவு செய்யப்பட்டது. மாநகராட்சி |

| | | | |
|---|---|---|---|
| | | வருடாந்திர குத்தகை இனங்களிலும் கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம் குத்தகைக்கு விடுதல் குறித்து 2009-2010ஆம் ஆண்டு முதல் திருத்திய நடைமுறைகள் குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி முதல் குத்தகை கால அளவை ஓராண்டில் இருந்து (சில நிபந்தனைகளுக்குட்பட்டு) மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விட பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு ஆணை வழங்கியது போல் அனைத்து மாநகராட்சிகளுக்கும் மேற்படி ஆணையை நீட்டித்துள்ளதால் ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% குத்தகை தொகை உயர்வும் செய்யலாம் எனவும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் பொது ஏலத்தில் விடப்பட வேண்டுமெனவும், மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வுரிமத்தை பெறலாம் எனவும் வாரிசுதாரருக்கு விருப்பம் இல்லையெனில் உரிமம் மறு ஏலம் விடப்படும் என மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ளதின் படி தூத்துக்குடி மாநகராட்சியிலுள்ள உரிய இனங்களை 2010-2011ஆம் ஆண்டுமுதல் 2012-2013ஆம் ஆண்டு முடிய உரிம இனங்கள் தூத்துக்குடி மாநகராட்சி வருவாய் அலுவலர் (பொ) மற்றும் வருவாய்ஆய்வர் அவர்களிடம் இருந்து பெறப்பட்டஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகளின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட நிபந்தனைகள் மற்றும் புதிய கட்டண விகிதங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1) அரசாணை நிலை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா ந 2) துறை நாள் 25-5-2009யை மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>2) அரசாணை (நிலை) எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள் 25-5-2009ன்படி தூத்துக்குடி மாநகராட்சி வருவாய்அலுவலர் (பொ) மற்றும் வருவாய் ஆய்வர் அவர்களின் அறிக்கைப்படி தயார் செய்யப்பட்ட 2010-2011ஆம் ஆண்டு முதல் 2012-2013ஆம் ஆண்டு முடிய உள்ள (1-4-2010 முதல் 31-3-2013 வரை) ஆண்டுக்கான தூத்துக்குடி மாநகராட்சி உரிய இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் காணும் பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>3) 2010-2011 முதல் 2012-13ஆம் ஆண்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை தினசரி நாளிதழில், மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் கூட்டுறவு அச்சகத்தில் ஏல அறிக்கை நிபந்தனைகள் புத்தகம் 200 எண்ணம் அச்சிடவும் அதற்குரிய செலவுத்தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) இம்மாமன்ற தீர்மான எண் 76 நாள் 4-1-2010இன்படி சந்தை மற்றும் வாகன காப்பகத்திற்கான அளவுகளை அங்கீகரிக்கலாம்.<br>5) உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் கடித எண் அ1/10/10 நாள் 08-01-2010ல் தெரிவித்துள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சந்தைக்கான புதிய கட்டண விகிதத்தை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>அ16 /1059 / 2009 | ஏல இனங்களான இராஜாஜி பூங்காவிலுள்ள குளியல் அறை அமைந்துள்ள இடமானது, பொதுமக்கள் அரசு மருத்துவமனைக்குச் செல்லும் அணுகுசாலையாக பயன்படுத்தப்படவுள்ளதால் மேற்காண் குளியலறையை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி இனத்தில் இருந்து நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. பாளையங்கோட்டை ரோட்டில் உள்ள வட்டத் தெப்பம் குளியல்அறை அமைந்துள்ள இடத்தில் மாநகராட்சியின் வருவாயை பெருக்கும் விதத்தில் புதிய வணிக வளாகக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்காண் குளியலறையை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி இனத்தில் இருந்து நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட இடத்தில் கடைகள் கட்டுவதால் தற்போது கிடைக்கப் பெற்றுள்ள நிதியை விட கூடுதல் வருவாய் மாநகராட்சிக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளதாக மன்றம் கருதுகிறது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக்கப்பட்டது. அலுவலகக்குறிப்பு 4 மற்றும் 5 அங்கீகரிக்கப்பட்டது. |
| | 19 | இம்மாநகராட்சி ரோச் பூங்காவில் உள்ள நவீன கட்டண கழிப்பறையை ரோச் பார்க் வாக்கர்ஸ் கிளப் மூலம் பராமரிக்க அனுமதி கோரி அதன் தலைவர் மனு செய்துள்ளார். மேற்படி மனு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** தற்போது அவ்விடத்தில் சட்ட விரோத செயல்கள் நடப்பதை தவிர்க்கும் பொருட்டு அவ்விடத்தில் உள்ள கழிப்பறையை பொது மக்கள் நலன் கருதி இலவச கழிப்பிடமாக உபயோகிக்கலாம். மேலும் மேற்கண்ட கழிப்பிடம் எந்தவித கட்டணமின்றி கழிப்பிடத்தை பராமரிக்கவும் மற்றும் அதற்குரிய மினகட்டணம் ரோச் பார்க் வாக்கர்ஸ் கிளப் சொந்த செலவில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் மேலும் ஒவ்வொரு வருடத்திற்கும் மாமன்ற அனுமதி பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் தற்போது முதல் கட்டமாக 31-12-2010 முடிய பராமரிக்க மாமன்றம் தற்காலிக அனுமதி வழங்கலாம்.<br>அ16 / 1059 / 2009 | 62) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது. |